## உலக மகளிர் தின விழாவில்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - மகளிர் நலன் காக்க வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்!



- புதிதாக காஞ்சிபுரம், ஈரோடு, தர்மபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகை, இராணிப்பேட்டை, கரூர் ஆகிய ஊர்களில் 72 கோடி ரூபாயில், 700 படுக்கைகளுடன் கூடிய புதிய 'தோழி' விடுதிகள்
- கிராம மற்றும் நகரப் பேருந்துகளில், சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தவர்கள் பயன்களைப் பெறலாம்.
- கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெறப்படுகின்ற பல்வேறு கடன்கள் பெற முன்னுரிமை.
- கோ-ஆப் டெக்ஸ் பொருட்களுக்கு 5 விழுக்காடு கூடுதல் தள்ளுபடி.
- இ-சேவை மையங்களில், 10 விழுக்காடு சேவைக் கட்டணம் குறைவு.
- மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த ஒரு கோடி மகளிர்க்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்படும். இதன் மூலம் கிராம மற்றும் நகரப் பேருந்துகளில், சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம் போன்ற அரசின் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

இன்று தமிழ்நாடு முழுவதும் 34 ஆயிரத்து 73 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 42 ஆயிரத்து 949 மகளிருக்கு 3 ஆயிரத்து 190 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி இருக்கிறேன். இதை தொடங்கி வைக்கின்ற விதமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்ற 3 ஆயிரத்து 584 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 592 மகளிருக்கு 366 கோடியே 26 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை இந்த நிகழ்ச்சியில் வழங்க இருக்கிறேன்.

இதைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வங்கிக் கடன் இணைப்புகளையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்க இருக்கிறார்கள்.

**மகளிர் சுய உதவிக்குழு குறித்து கலைஞர் கருத்து!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுவை பற்றி சொல்லும்போது, "வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து, பாதுகாக்க வேண்டிய இடத்தில் பாதுகாக்கின்ற அமைப்பாக இருப்பதால்தான் இலட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் பணம் புழங்குகின்ற இயக்கமாக மாறியிருக்கிறது என்று சொன்னார். வங்கிக் கடன் இணைப்புகளைப் பெற்ற மகளிர் குழு சகோதரிகள், நான் கேட்டுக் கொள்வது, அந்தத் தொகையை நாங்கள் வழங்குகின்ற கடன் என்று நினைக்காமல், நம்முடைய அரசும், நானும் உங்கள் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடையாளமாக நீங்கள் நினைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறந்த தொழில் முனைவோராக உயர்ந்திட வாழ்த்துகிறேன். தமிழ்நாடு காவல் துறை சார்பில், பெண் அதிரடிப் படை காவலர்கள் இங்கே சாகச நிகழ்ச்சிகளை எல்லாம் செய்து காண்பித்தார்கள். மேலும், எனக்கு அணிவகுப்பு மரியாதையும், பாதுகாப்பும் வழங்குகிறார்கள். அதைப் பார்க்கும்போது, அறிவிலும், வீரத்திலும், சிறந்த சங்க கால வீரத் தமிழச்சிகளை நேரில் பார்த்த உணர்வு எனக்கு ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, நம்முடைய திட்டங்களை விளக்கி கலை நிகழ்ச்சியாக நடத்தி காண்பித்தார்கள், சிறப்பி த்தார்கள். ஏதோ ஒரு சிறப்பான சினிமா பார்த்த மகிழ்ச்சியை எனக்கு அது தந்தது.

**மகளிர் உயர மாநிலம் உயரும்!**

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இந்த நிகழ்ச்சியால், உங்களுக்காக இன்னும் உழைக்க வேண்டும் என்று உற்சாகம் தான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய ஆட்சியின் இலக்கணம் மகளிர் உயர, மாநிலம் உயரும் அதுதான். அனைத்து துறைகளிலும், எங்கு பார்த்தாலும், பெண்கள்தான் இருக்கிறீர்கள். தடைகளை தாண்டி சாதனைகளை படைக்கின்ற உங்களைப் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்?

• இந்த ஆண்டுக்கான அவ்வையார் விருது பெறக்கூடிய

டாக்டர் யசோதா சண்முக சுந்தரம் அவர்கள்.

• பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்ற கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலை சேர்ந்த சௌமியா

• பெண் குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்துகின்ற வகையில் சிறப்பாக செயல்பட்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்

திருமிகு அழகு மீனா அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்

திருமிகு கலைச்செல்வி மோகன் ஆகியோருக்கும்,

• நன்னிலம் நில உடைமைத் திட்டத்தின் கீழ் நில உதவியும், நிதி உதவியும் பெறக்கூடிய 5 பேர்

• ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் வெளிநாடு சென்று

பட்ட மேற்படிப்பு படிக்கச் செல்லும் 5 மாணவியர்

• தொழிலாளர் நலத்துறையின் சார்பில், உதவி பெறும் 50 மகளிர் ஆகிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

• இன்றைக்கு நாம் கொண்டாடுகின்ற மகளிர் தினமானது, கல்வி, சம வாய்ப்பு, சுதந்திரம், பெண்ணுரிமை, சுயமரியாதை, தன்னம்பிக்கை, தற்சார்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றில் மகளிர் தங்களுடைய உரிமைகளை போராடி வென்றெடுத்த தினம்!

• உங்களுடைய மன வலிமையையும், ஆளுமைத் திறனையும், நினைப்பதை நிறைவேற்றுகின்ற ஊக்கத்தையும் பார்க்கும்போது, நான் பெருமிதம் அடைகிறேன். இந்தக் காட்சியை 50 ஆண்டுகளுக்கு முன்னால் அவ்வளவு சுலபமாக பார்க்க முடியாது. 100 ஆண்டுகளுக்கு முன்னால் பார்க்கவே முடியாது. ஆனால், அனைத்துப் பக்கமும் பெண்கள் வந்துவிட்டார்கள். நான் முதலமைச்சராக அனைத்து மக்களுக்கும் வைக்கக்கூடிய கோரிக்கை, ஆணாதிக்க மனோபாவம் மறைய வேண்டும். பெண்கள் நமக்காக தியாகம் செய்ய பிறக்கவில்லை, அவர்களும் நம்மைப் போலவே, அனைத்து உரிமைகளும் கொண்ட சக மனிதர் என்று எண்ணமும் எல்லோருக்கும் தோன்ற வேண்டும்.

**உண்மையான சமுதாய வளர்ச்சி எது?**

அரசியலில், வேலை பார்க்கின்ற இடத்தில் என்று அனைத்து இடங்களிலும் உரிய மதிப்பும், மரியாதையும், பாதுகாப்பும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். கேலி பேசுவதும், அவர்கள் வளர்ச்சியைக் கொச்சைப்படுத்துவதும் இருக்கவே கூடாது. அதுதான் உண்மையான சமுதாய சிந்தனை வளர்ச்சி! இதை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

திராவிட மாடல் அரசில் பெண்களுக்கான திட்டங்களைப் பார்த்து பார்த்து இப்போது ஆண்களும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். "என்னங்க எல்லா திட்டங்களும் பெண்களுக்குத் தானா... எங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்" என்று ஆண்கள் கேட்கக்கூடிய அளவில் தான் இன்றைக்கு செயல்படுகிறோம். அது தொடரும், தொடரும்.

மகளிர் உரிமைத் தொகையால் பெண்கள் தங்களுடைய குடும்பத்தை பாதுகாக்கிறார்கள். அது ஆண்களையும் சேர்த்துதான் வளர்ச்சியடையச் செய்யும். என்னை தங்களுடைய குடும்பத்தில் ஒருவராக நினைத்து, பாசம் காட்டுகின்ற அத்தனை தாய்மார்கள் அவர்கள் குடும்பத்தின் ஆண்கள் என்று அனைத்துத் தரப்பிற்குமான நல்லாட்சியாக, திராவிட மாடல் ஆட்சி எப்போதும் தொடரும்!


எனது அருமை சகோதரிகளே! நீங்கள் கடமை செய்ய மட்டுமல்ல, உரிமை பெறவும் பிறந்தவர்கள். அன்புடன், பண்பும் சேர்ந்து வீரமும், விவேகமும் உங்களுடைய அணிகலன் ஆகட்டும். அறிவும், துணிச்சலும் உங்கள் அடையாளமாக ஆகட்டும். சாதனைகள் மூலமாக உயருங்கள். ஒவ்வொரு பெண்ணும், மதிப்பிட முடியாத ஆற்றல்! உலகம் உங்களுடையது! உங்களுக்கானது! என்று உங்கள் சாதனைகள் தொடரட்டும்! தொடரட்டும்! தொடரட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், இன்று (09.03.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : நடைபெற உள்ள நாடாளுமன்ற கூட்டத் தொடர் - குறித்து**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 08.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நல உதவிகள்!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

**அரசின் திட்டங்கள் குறித்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்!**

தொடர்ந்து, இவ்வரசு செயல்படுத்தி வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், திருமண உதவித் திட்டம், தோழி விடுதிகள் திட்டம், TNRISE திட்டம், நன்னிலம் நில உடைமைத் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்த பாடலுடன் கூடிய மாணவிகளின் கலை நிகழ்ச்சியை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

**அரசின் திட்டங்கள் குறித்து பயனாளிகளின் அனுபவப் பகிர்வு**

முன்னதாக, கேரம் விளையாட்டு வீராங்கனை செல்வி காசிமா, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளி திருமதி. ஜெ. எலிசபெத், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் நிர்மலா, புதுமைப் பெண் மற்றும் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற மாணவி செல்வி பவானி, உயர்கல்வி உதவித் தொகை பெற்று அயல்நாடு சென்று பயின்ற மாணவி செல்வி நித்யஸ்ரீ ஆகியோர் அரசு திட்டங்களின் மூலம் தாங்கள் பெற்ற பயன் குறித்து தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழச்சி தங்கப்பாண்டியன், டாக்டர் கனிமொழி சோமு, டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், எம்.கே. மோகன், ஜோசப் சாமுவேல், எஸ். சுதர்சனம், த. வேலு, ஆர். மூர்த்தி, பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர்ஜிவால், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சமூக நலன் மகளிர் உரிமைத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமர குருபரன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கே. வீரராகவ ராவ். ஆணையர் சி.அ. ராமன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி. சிங், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் ஏ.எஸ். குமரி, காவல் துறை உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் மாணவிகள், பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சொ.வேலு தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

# எழும்பூர் தொகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - புகழரங்கம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – ஈ.ஆர்.ஈஸ்வரன் – எஸ்.ராஜேஸ்குமார் சிறப்புரை!

*சென்னை, மார்ச் 9 -*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - எழும்பூர் வடக்கு பகுதி சார்பாக, மாபெரும் புகழரங்கம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பொதுச்செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி இ.ஆர்.ஈஸ்வரன், எம்.எல்.ஏ, காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் எஸ்.ராஜேஷ்குமார், எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 16, பொன்னுக்கு படைக்கும் தலைமை! பூபாபள விடியலின் புதுமை!! எனும் தலைப்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் நாளை 10.03.2025 திங்கள் அன்று மாலை 6.00 மணியளவில், புரசைவாக்கம், தானா தெருவில் நடைபெறுகிறது.*

*இப்புகழரங்கத்தில் பகுதி செயலாளர் சொ.வேலு தலைமை வகிக்கிறார். மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, வி.சுதாகர், பி.எம். யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், எஸ்.மணிமுடி, கோ.மணி, புனிதவதி எத்திராசன், சரிதா மகேஷ்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல்.சந்தர்ராஜன், பரிதிஇளம்சுருதி, பாத்திமா முசாஃபர், ஜி.தாமோதரன், க.வினோத் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மாபெரும் புகழரங்கத்தில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பொதுச்செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி இ.ஆர்.ஈஸ்வரன், எம்.எல்.ஏ, காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் எஸ்.ராஜேஷ்குமார், எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் இ.பரந்தாமன், ப. தாயகம்கவி, ஏ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், வே.உமாகாந்த், ஆர்.வரதன், சங்கரிநாராயணன். மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவஹர்,*

*பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எஃப்.வ.முரளிதான், எ. நாகராசன், எம்.சி, செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், எஸ் முரளி எஸ் ராஜசேகர் டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி எம். டி.ஆர்.நாகராஜன். பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், சுதா தீனதயாளன். ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எப். மோகன், பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, இரா.வீரமணி, ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், துரைக்க ண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, கிருஷ்ணமூர்த்தி,*

*வட்டச் செயலாளர்கள்: தி.தயாளன், வி.அபாய், ஆர். எம்.ரங்கநாதன், எம்.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன் மற்றும் மாவட்ட கழக, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*வட்ட கழக செயலாளர் சு.மனோகரன், ந.பாலு நன்றி கூறுகிறார்.*



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துக்கொண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படும் 588 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.94.96 கோடி வங்கி கடன் இணைப்புகளை வழங்கி, விழிப்புணர்வு காணொளியை வெளியிட்டார். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ், க.செல்வம் எம்.பி., செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி மற்றும்பலர் கலந்து கொண்டனர்.

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி ஆலோசனைக் கூட்டம்!

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

*சென்னை, மார்ச் 9 -*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் - தியாகராயர்நகர் கிழக்கு - மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.எ., கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் அறிவித்துள்ளனர்.*

*இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு: -*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் - தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி ஆலோசனை கூட்டம் நாளை (10-03-2025 திங்கட்கிழமை) மாலை 6:00 மணி அளவில் எண் - 87, உஸ்மான் சாலை தியாகராய நகரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*எனவே இக்கூட்டத்தில் பகுதிகழக நிர்வாகிகள், வட்டக்கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்டம் அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*பொருள்: "தமிழ்நாடு போராடும் ; தமிழ்நாடு வெல்லும்" என்கிற தலைப்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டம் தொடர்பாக. , தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தமிழக அரசின் பட்ஜெட் விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் தொடர்பாக, கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. , மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தங்களது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.*



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னை மாநகராட்சி, 9 வது மண்டலம், 118 வது வார்டில் பணிபுரியும் அனைத்துத் துறையைச் சார்ந்த மகளிர் பங்கேற்ற பாட்டு, நடனம், இசை நாற்காலி மற்றும் கைப்பந்து உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை மருத்துவர் பிரியா எழிலன், மண்டல சுகாதார அலுவலர் மருத்துவர் ஆஷா லதா ஆகியோர் தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கும், போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் பரிசுகளை வழங்கினர். 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சியில் மண்டலத்துக்குட்பட்ட அனைத்துத் துறைகளைச் சார்ந்த மகளிர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.